# அக்டோபர் – 15 – பொதுக்கால 28ம் ஞாயிறு

**நீங்கள் போய் சாலையோரங்களில் காணும் எல்லோரையும் திருமண விருந்திற்கு அழைத்து வாருங்கள்'' (மத்.22:9)**

## முதல் வாசகம் : ஏசாயா : 25 : 6 - 10

படைகளின் ஆண்டவர் இந்த மலையில் மக்களினங்கள் அனைவருக்கும் சிறந்ததொரு விருந்தை ஏற்பாடு செய்வார் அதில் சுவைமிக்க பண்டங்களும், பழரசப் பானமும், கொழுப்பான இறைச்சித் துண்டுகளும், வடிகட்டிப் பக்குவப்படுத்திய திராட்சை இரசமும் பரிமாறப்படும். மக்களினங்கள் அனைவரின் முகத்தை மூடியுள்ள முக்காட்டை இந்த மலையில் அவர் அகற்றிவிடுவார் பிற இனத்தார் அனைவரின் துன்பத் திகிலைத் தூக்கி எறிவார்.என்றுமே இல்லாதவாறு சாவை ஒழித்துவிடுவார் என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து விடுவார் தம்மக்களுக்கு ஏற்பட்ட நிந்தையை இம்மண்ணுலகில் அகற்றிவிடுவார் ஏனெனில், ஆண்டவரே இதை உரைத்தார்.அந்நாளில் அவர்கள் சொல்வார்கள் இவரே நம் கடவுள் இவருக்கென்றே நாம் காத்திருந்தோம் இவர் நம்மை விடுவிப்பார் இவரே ஆண்டவர் இவருக்காகவே நாம் காத்திருந்தோம் இவர் தரும் மீட்பில் நாம் மகிழ்ந்து அக்களிப்போம்." ஆண்டவரின் ஆற்றல் இம்மலையில் தங்கியிருக்கும் எருக்குழி நீரில் வைக்கோல் மிதிக்கப்படுவதுபோல், மோவாபு அவரால் மிதிக்கப்படுவான்.

**பதில்பாடல் :** நான் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்

## இரண்டாம் வாசகம் : பிலிப்பியர் 4 : 12 – 14, 19 - 20

சகோதர சகோதரிகளே! எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும் வளமையிலும் வாழத் தெரியும். வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவோ குறைவோ எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன்.எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு.ஆயினும் நான் பட்ட துன்பத்தில் நீங்கள் பங்குகொண்டது உங்கள் நன்மனத்தைக் காட்டுகிறது.என் கடவுள், கிறிஸ்து இயேசுவின் வழியாய்த் தம் ஒப்பற்ற செல்வத்தைக் கொண்டு, உங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்வார்.நம் தந்தையாகிய கடவுளுக்கு என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்.

## நற்செய்தி : மத்தேயு 22 : 1 – 14

அக்காலத்தில் மக்கள் கூட்டம் வந்து கூடக்கூட இயேசு அவர்களைப் பார்த்து உவமைகள் வாயிலாகப் பேசியது: "விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம் அரசர் ஒருவர் தம் மகனுக்குத் திருமணம் நடத்தினார்.திருமணத்திற்கு அழைப்புப் பெற்றவர்களைக் கூட்டிக்கொண்டு வருமாறு அவர் தம் பணியாளர்களை அனுப்பினார். அவர்களோ வர விரும்பவில்லை.மீண்டும் அவர் வேறு பணியாளர்களிடம், "நான் விருந்து ஏற்பாடு செய்திருக்கிறேன். காளைகளையும் கொழுத்த கன்றுகளையும் அடித்துச் சமையல் எல்லாம் தயாராயுள்ளது. திருமணத்திற்கு வாருங்கள்" என அழைப்புப் பெற்றவர்களுக்குக் கூறுங்கள் என்று சொல்லி அனுப்பினார்.அழைப்புப் பெற்றவர்களோ அதைப் பொருட்படுத்தவில்லை. ஒருவர் தம் வயலுக்குச் சென்றார் வேறு ஒருவர் தம் கடைக்குச் சென்றார்.மற்றவர்களோ அவருடைய பணியாளர்களைப் பிடித்து இழிவுபடுத்திக் கொலை செய்தார்கள்.அப்பொழுது அரசர் சினமுற்றுத் தம் படையை அனுப்பி அக்கொலையாளிகளைக் கொன்றொழித்தார். அவர்களுடைய நகரத்தையும் தீக்கிரையாக்கினார்.பின்னர் தம் பணியாளர்களிடம், "திருமண விருந்து ஏற்பாடாகி உள்ளது. அழைக்கப் பெற்றவர்களோ தகுதியற்றுப் போனார்கள்.எனவே நீங்கள் போய்ச் சாலையோரங்களில் காணும் எல்லாரையும் திருமண விருந்துக்கு அழைத்து வாருங்கள்" என்றார்.அந்தப் பணியாளர்கள் வெளியே சென்று வழியில் கண்ட நல்லோர், தீயோர் யாவரையும் கூட்டி வந்தனர். திருமண மண்டபம் விருந்தினரால் நிரம்பியது.அரசர் விருந்தினரைப் பார்க்க வந்த போது அங்கே திருமண ஆடை அணியாத ஒருவனைக் கண்டார்.அரசர் அவனைப் பார்த்து, "தோழா, திருமண ஆடையின்றி எவ்வாறு உள்ளே வந்தாய்?" என்று கேட்டார். அவனோ வாயடைத்து நின்றான்.அப்போது அரசர் தம் பணியாளர்களிடம், "அவனுடைய காலையும் கையையும் கட்டிப் புறம்பே உள்ள இருளில் தள்ளுங்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்" என்றார்.இவ்வாறு அழைப்புப் பெற்றவர்கள் பலர், ஆனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களோ சிலர்."என்றார்.

**தியானம்:** இன்றைய மூன்று வாசகங்களிலும் அழைப்பு, அதாவது உறவின் பரிமாற்றம் இழையோடுவதைக் காண்கின்றோம். அழைத்தல் என்றாலே மகிழ்ச்சி, உறவின் சங்கமம். மனிதர்களாகிய எமது வாழ்விலே இடம்பெறும் அழைப்புக்களில் இறைபிரசன்னம் நிறைந்திருக்க வேண்டும் என்பது இன்றைய இறைவார்த்தைகளின் மறைமுக வெளிப்பாடாகும். பழைய ஏற்பாடு முதற்கொண்டே இறைவன் பல்வேறு மனிதர்களை அழைக்கின்றார். இறைவனின் எல்லா மனித அழைப்புக்களிலும் மனித மகிழ்ச்சி, மனித விடுதலை போன்ற ஆழமான வாழ்வுப்பாடங்கள் இடம்பெறுகின்றன. குறிப்பாக இன்றைய முதல் வாசகத்திலும், நற்செய்தி வாசகத்திலும் ஆண்டவர் அளிக்கும் மாபெரும் விருந்திற்கான அழைப்பு மையப்படுத்துவதைப் பார்க்கின்றோம். எசாயா ஒரு பிரகாசமான எதிர்காலத்தை வெளிப்படுத்துகின்றார். இறையரசில் நித்திய பேரின்பம் உண்டு. அனைத்துலக அமைதி, கடவுளோடு நெருக்கமான உறவு இவை அனைத்திற்காகவும் கடவுள் எப்போதும் மக்களுக்கு அழைப்பு விடுத்துக்கொண்டே இருக்கின்றார். கடவுளின் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வோருவரும் மனமாற்றம் பெற வேண்டும். மனமாற்றம் என்பது இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்ள எம்மிடமிருந்த எதிர்பார்க்கப்படும் ஒரு உடன்படிக்கையாகும். இயேசு தனது இறையாட்சியின் பணியை தொடரும்போது மனந்திருந்தி நற்செய்தியை நம்புங்கள் ஏனெனில் இறையாட்ச்சி நெருங்கி வந்துவிட்டது என்று அழைத்தார். எனவேதான் நாம் மனமாற்றம் பெற்ற மக்களாக அன்பு, சகோதரத்துவம், நீதி, உண்மை, மன்னிப்பு மகிழ்ச்சி போன்ற இறையாட்சி விழுமியங்களை திருமண ஆடைகளாக அணிந்து கொண்டவர்களாச் செல்வோம். இயேசு வாசலில் நமக்காக காத்திருக்கின்றார்.